26th October 1957]

ஆரம்பிக்கிறார்களோ அவைகள் எல்லாம் வெற்றிகரமாக நடந்து பொது ஜனங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும் என்பதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர்களுடைய கோரிக்கை என்னவென்று தெரியாது. ஆனால் சில அங்கத்தினர்கள் எங்கே, எந்த விதமான வேலை நிறுத்தம் ஏற்பட்டாலும் அதற்கு அவர்களின் ஆதரவைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு நாம் ஆட்சேபணை சொல்லமுடியாது. அது அவர்கள் விஷயம்.

SRI N. K. PALANISAMI : மத்திய அரசாங்கமே அவர்களது கோறிக்கையை ஒப்புக்கொண்டு வேலை நிறுத்தம் வேண்டாம், அதற்குப் பதிலாக ஒரு ட்ரிப்யூனல் ஏற்படுத்தி விசாரணை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் பல தரம் கேட்டார்கள்; ஆனால் சர்க்கார் அதற்கு மறுத்தார்கள். ஆகவேதான் இம்மாதிரி ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்தார்கள். கனம் மந்திரியவர்கள் இது தவறான கொள்கை என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் அப்படிச் சொன்னார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னேன். அதை ஏற்றுக்கொள்ள அங்கத்தினருக்கு உரிமையுண்டு. ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும் உரிமையுண்டு.

### *Employment of convict labour*

* 2 *Q*.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state— 9–10 p.m.

(*a*) whether it is a fact that certain convicts in the Madras Central Jail are made to work in the Government Bus Transport Workshop, Madras, as full-time workers;

(*b*) if so, what their service conditions are; and

(*c*) whether they will be given any service certificates at the time of their release from the prison?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Prisoners who are suitable from the point of view of aptitude and discipline are selected for service in the Government Bus Service Depot and the following concessions are allowed to them :—

(1) They are granted the maximum special remission to which they are entitled;

(2) They are paid an allowance of one anna per head per day by the State Transport department to the Jail department towards the purchase of tobacco and betel for their use. In the case of those who do not use tobacco and betel, the amount is credited to their account and handed over to them at the time of their release.

(3) They are supplied one cake of carbolic soap per month per head and one ounce of gingelly oil per head on every Sunday excepting the Sunday on which all the prisoners in the Central Jail, Madras, are issued gingelly oil.

(4) They are issued two additional sets of blue clothing.

(*c*) Yes, Sir.

[26th October 1957

SRI S. PAKKIRISAMI PILLLAI: இந்தச் சிறைச் சாலையிலிருக்கும் கைதிகள் பஸ் டிரான்ஸ்போர்ட் வொர்க்ஷாப்பில் சாதாரண தொழிலாளர்களாக வேலை செய்யவேண்டுமென்று நிர்பந்திக்கிற காரணத்தினால், தொழிலாளர்களுக்குண்டான உரிமைகள் அவர்களுக்கும் இருந்தாக வேண்டும். ஆனால் அப்படி அந்த உரிமைகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது சட்ட விரோதமாகும். அவர்கள் அந்த இடத்தில் எட்டு மணி நேரம் வேலை செய்யும்போது மற்ற தொழிலாளர்களுக்குள்ள உரிமைகள் ஏன் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை ?

MR. SPEAKER: One question at a time please.

SRI S PAKKIRISAMI PILLAI: It is in continuation of the question I put.

MR. SPEAKER: No. The hon. Member can put another question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தண்டிக்கப்பட்டு சிறை வாசம் செய்யும் அரசியல் கைதிகளுக்கு சில நிபந்தனைகள் உண்டு. அவர்கள் சிறையில் நிர்பந்தமாக வேலை செய்வதைவிட வெளியில் அனுப்பி அவர்கள் வேலை செய்வது நலம் என்று ஒரு கருத்து. மற்றொன்று, பிற வேலைகள் செய்வதற்கு அவர்களுக்கு பயிற்சி ஏற்படுகிறது. சிறையிலிருந்து வெளியே சென்றால் அவர்கள் நல்ல தொழிலில் ஈடுபடலாம். பஸ் டிரான்ஸ்போர்டில் வேலை கொடுப்பது பயிற்சி என்ற முறையில்தான் வேலை கொடுக்கப்படுகிறது. மற்ற தொழிலாளர்களைப்போல் அவர்கள் கருதப்படுவது கிடையாது.

SRI M. KALYANASUNDARAM: பஸ் டிரான்ஸ்போர்ட் வொர்க்ஷாப் பாக்டரி சட்டத்திற்கு உட்பட்டது. பாக்டரி சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிற அனுகூலங்கள் எல்லாம் தொழிற்சாலையில் வேலைசெய்கிற தொழிலாளர்கள் என்ற முறையில் இவர்களுக்கும் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவர்கள் செய்யும் தொழில் அசல் தொழில் அல்ல. டிரெயினிங்தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு, அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

SRI A. A. RASHEED: Of the convicts employed, are there any who are sentenced for murder ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have no information, Sir.

SRI A. GOVINDASAMY: சென்னையில், டிராம் போக்குவரத்து நின்ற பிறகு பல தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் தொழிற்சாலையில் வேலை கொடுக்காமல் சிறை கைதிகளுக்கு மாத்திரம் அதில் வேலை கொடுத்து வருவதின் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சிறையிலுள்ள கைதிகளுக்கு வேலை கொடுப்பதினால் மற்ற தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம் அல்ல என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: அப்படி வேலை கொடுக்கப்படுவதின் காரணமாக இடையே விடுதலையாகின்ற கைதிகள் நல்ல வாழ்க்கையில் ஈடுபட சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட கைதிகளுக்கு போக்குவரத்து டிபார்ட்மெண்டில் வேலையேற்க சலுகை காண்பிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

26th October 1957]

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்த வொர்க்ஷாப்பில் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கும் லட்சோப லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும் வேலை கிடைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது வேறு விஷயம். ஆனால் இது மாதிரி பல திட்டங்களும் ஆலோசனையில் இருந்து கொண்டிருக்கிறது. வைகை பிராஜக்டில் மதுரை சிறையில் இருக்கும் கைதிகளை கொண்டு வேலைக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri P. S. CHINNADURAI : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து சிறைச்சாலைகளில் பயிற்சிபெறும் தொழிலாளர்களுக்கு கொடுப்பது மிக குறைந்த சம்பளம் என்று தெரியவருகிறது. ஒரு அணு என்று சொல்லுவது ரொம்பவும் குறைவானது. சாப்பாடு, துணி முதலியன கொடுத்தபோதிலும் அவர்களுக்குரிய அசல் ஜீவன சம்பளத்தையாவது கொடுத்து அவர்கள் சிறையைவிட்டு வெளியேறும்போது ஒரு கணிசமான தொகையை அவர்கள் பெறும்படியான ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த சிறை கைதிகளிடத்தில் வாங்கப்படுவது அசல் வேலை அல்ல. இவர்களுக்கு அங்கேயே ஸ்திரமாக வேலை கொடுத்துக்கொண்டிருக்க முடியாது. ஒரு செட் பயிற்சி முடிந்து ஆறு மாதத்திற்குப் பிறகு இன்னொரு செட் கொண்டு வரப்படுவார்கள். இவ்விதம் தான் வேலை கொடுக்கப்படுகிறது.

Sri M. P. SUBRAMANIAM : சிறை கைதிகளுக்கு வேலை கொடுத்து வருவது வரவேற்கத்தக்கதுதான். இதை மற்ற மாவட்டங்களிலும், குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள வேலைகளை செய்வதற்கு இம்மாதிரி தண்டனைபெற்ற கைதிகளை உபயோகப்படுத்த அரசாங்கம் ஏதாவது ஒரு முறையை கையாளுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த திட்டத்தை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்றுள்ள திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துகொண்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Sir, does not this change of environment, that is, this kind of taking the convicts from the Central Jail to the workshop of the Bus Transport amount to some sort of mental and psychological satisfaction to the convicts themselves and have they not expressed the opinion that they are willing to work in such environment?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That is exactly the reason why Government are adopting this method and I have no doubt that the prisoners are feeling fairly satisfied with this change.

*Medical Officers sent for advanced studies*

* 3 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have issued any orders during 1957 to the effect that Medical Officers employed in hospitals should not be sent to foreign countries for advanced study in medicine; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.